தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. VI.—No. 3] MADRAS:—SUNDAY JANUARY, 16, 287. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

தீட்டுச்சம்பாஷணை.	சாதி - மனுநீதி வாதம்.
இப்பிரபஞ்சவிகற்பம்.	பொங்கல்விருத்தாந்தம்.
இந்துதத்துவபிரபாவம்.	வர்த்தமானம்.

தீட்டுச்சம்பாஷணை.

———o———

ஒருவர்போசனத்துக்கு உட்கார்ந்து, கலத்தில் அன்னம் அளிக்கப்பட்டவுடனே, அவருடையநேசரொருவர் அதியாவசியசமான காரியமாகவந்ததைக்கண்டு, அவர் எழுந்துபோயினர். அங்கிருந்தவர்கள் அன்னம் ஆறிப்போகாதபடி மணையினால் மூடிவைத்தார்கள். அவர் இரண்டொரு நிமிஷத்தில் அந்தகாரியத்தை முடித்துவிட்டுவந்து அந்த மணையையெடுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். அதைப் பார்த்திருந்த நேசர் மணைதீட்டாய்விட்டதே, கழுவாமல் அதன்மேல் உட்கார்ந்துகொண்டீரே, என்னவென்று கேட்டனர். மெய்தான், கழுவினால் தீட்டுப்போமாகில், கலமும் கழுவப்பட்டிருப்பதினால் தீட்டுப்போயிருக்குமேயென்றார். அதற்குச் சினேகர் அப்படியாமா, கலம் அடிக்கடி எச்சிற்பட்டுத் தீட்டாயிருக்கிறதே யென்றனர். வீட்டுக்காரர் - முன்னே வாயில் எச்சிலுண்டாயிருக்கிறது; அந்த எச்சில்கையிற்பட்டு, அந்தக்கை கலத்தில்பட்டுண்டானதீட்டு கழுவியும்போகாதிருந்தால், எச்சிலினால் தீட்டுப்பட்ட வலக்கையையும், கால்கழுவுவதினால் தீட்டுப்பட்ட இடக்கையையும கழுவிப்போட்டுக்கூப்பிக்கொண்டு கடவுளைத்தொழுவதும் எச்சிலுள்ளவாயினால் துதிப்பதும் சரியாகுமோவென்றார். சினேகர்ஜீவனுள்ளபிராணிக்கும் ஜீவனற்றவஸ்துவுக்கும் பேதமில்லையாவென்றார். வீட்டுக்காரர்- வஸ்துவினிடத்துத் தீட்டுநுழைவதுபிரத்தியட்சத்தில் புலப்படவில்லை; சரீரத்தில் நோயுண்டாயிருக்கும்போது, பற்றுப்போடுவதினாலும் ஒற்றடங் கொடுப்பதினாலும், மருந்து ஊறியும் சூடுதாங்கியும் குணமுண்டாவதை நாமுணருகிறோமாதலால், அதுபோல தீட்டென்பதொன்று உண்மைபொருளா யிருக்குமாயின் சரீரத்தில் நுழையக்கூடியதுதானென்று நினைக்கவேண்டியிருக்கிறதே யெனறார். சினேகர் வெட்கி ஒன்றுஞ்சொல்லாமற்போய்விட்டார்.

இப்பிரபஞ்சவிகற்பம்,

(7-வது பக்கத்தொடர்ச்சி.)

நெருங்கிய அறைகளிலும் அழுகிப்போன குப்பைகூளமும் நாற்றமும் மிகுதியுமுள்ள இடங்களிலும் கரியமிலவாயுமிகுச்யும் இருக்குமாதலால் அத்தகைய இடங்களில் நாமடிக்கடி யிருத்தல்கூடாது. அங்குஇருக்கநேரிட்டால் மேலைய வாயுவை நாம்சுவாசிக்கும்படிநேரிடும். அந்தவிஷவாயு மெல்லமெல்ல உட்சென்று நமதுதாத்தத்தைக்கெடுத்து தலைநோய் சுரம் முதலிய நோய்களை யுண்டுபண்ணும். ஆயினமையின், நாம் ஆரோக்கியமாய் வாழவேண்டுமாயின், பரிசுத்தமானகாற்றையே சுவாசித்தல்வேண்டும், வீட்டுமுற்றத்திலும், தெருவாசற்படிக்கு எதிரிலும் ஜலதாரைகள் குட்டைகள் முதலியவைகளில்லாமல் செய்துகொள்ளல்வேண்டும். ஏனெனின் இவைகளினின்று கரியமலவாயுவாகிய விஷவாயு எழும்பி வீடுகளை அசுத்தப்படுத்தும். நமது பள்ளி யறைகளில் சுத்தமானகாற்று வரும்படிக்கும் சுவாசித்த அசுத்தமான காற்று வெளியேபோகும்படிக்கும் செய்து கொள்ளல்வேண்டும். கட்டில்முதலான படுக்கைகளைச்சுற்றிலும் நல்லகாற்று உள்ளேநுழையாமலும் தடுக்கத்தக்க திரைச்சீலைகளை தொங்கவிடுதல்கூடாது. சிலர் சுத்தத்தைத்தரத்தக்க நல்லகாற்றுக்குப் பயந்து காற்றுலாவாத அறைக்குள்புகுந்துகொண்டிருப்பது என்னமௌடீகம் !

வாயுவானது பிராணவாயு, நிற்குண (உப்பு) வாயு என்னும் இரண்டுவாயுக்களின் கலப்பு என்று முன்னர்கூறி யிருக்கினறோம். இவ்விரண்டையன்றி வேறு சிலபதார்த்தங்களுண்டென்றும் அவற்றுள் கரியமிலவாயு விஷவாயுவென்றும் சென்ற வாரப்பத்திரிகையில் நன்குவிளங்கக்கூறினோம். வாயுவில், பிராணவாயுவும். நிர்க்குணவாயுவும் நீங்க இருப்பன நீராவி கரியமிலவாயு, இவ்விரண்டைப்பற்றியும் ஈண்டு வியவகரிப்பாம்.

நீராவியின்னதென அறியவேண்டுமாயின் ஒருபாத்திரத்தில் கொஞ்சம்ஜலத்தைக் கொண்டுவாருங்கள். அப்பாத்திரத்திலுள்ள ஜலத்தைப் பொங்கும்படிசெய்து அப்போது நடக்கும் காரியங்களை கவனித்தால் நீராவியினது தன்மைநன்குவிளங்கும். அப்பாத்திரத்திலிருந்து வெண்மையானபுகைகிளம்பிவெளிவாயுவுடன் கலக்குந்தோறும் பாத்திரத்தில் புகைவந்துகொண்டேயிருக்கும். அப்புகை வெளிவாயுவுடன் கலந்து நமது கண்களுக்குத்தெரியாமற்போய்விடும். இங்ஙனம் புகை பாத்திரத்திலிருந்து புறப்படுந்தோறும் பாத்திரத்திலுள்ள ஜலம்குறைந்துகொண்டே யிருக்கும். நாம் நெருப்பை அணைக்காமலிருந்தால் பாத்திரத்திலுள்ள ஜலம் கொஞ்சம்கொஞ்சமாய்க் குறைந்துகொண்டுவந்து கடைசியில் ஜலமில்லாமற்போய்விடும். இந்த ஜலமெங்கேபோயிற்று ? அந்தஜலம் எவ்வாற்றாலும் அழிந்துபோகவில்லை. ஆனால் அந்த ஜலம் ஆவியாகமாறி வாயுவுடன் கலந்திருக்கின்றது. ஆயினமையின்பாத்திரத்திலிருந்த ஜலம் நீராவியாக வாயுவிற்கலந்திருக்கின்றது. இந்த நீராவி வாயுவுடன் ஒருவேளைகொஞ்சமாகவும் ஒருவேளைமிகுதியாகவும் கலந்திருக்கும். இந்த ஆவிதான் மேகம், மூடுபனி, மழை, உறைபனியாக இருந்து மறுபடியும் பூமியிற்சேரும். இங்ஙனஞ் ... பூமியில் சூரியனது வெப்பத்தால் ஜலமானது ஆவியாய்மாறி மேகம், மூடுபனி, உறைபனி, மழையாகவிருந்து மறுபடியும் பூமியிற்சேரும். இவ்வாறேஜலமானது வெப்பத்தாலாவியாக மாறுவதும் ஆவியானது குளிர்ச்சியால் ஜலமாவது மியற்கை. இவ்வுண்மையரியாதவர்கள் மேகங்களுயிருள்ளவைகளென்றும் அவைகள் சமுத்திரங்களிலும் மலைச்சுனைகளிலும் வந்திறங்கி ஜலபானம் பண்ணுமென்றும் கூறித்திரிவர்.

பூமியிலுள்ளஜலம் உஷ்ணத்தால் ஆவியாகமாறி காற்றில் கலந்திருப்பதே நீராவியென்றும், இந்த நீராவி வாயுவுடன் ஒருவேளை கொஞ்சமாயும் ஒருவேளைமிகுதியாயும் கலந்திருக்குமென்றும், அவ்வாறு கலந்திருக்கும் ஆவியே மேகம் மூடுபனி, மழை உறைபனியென்றும் மேலே விளக்கினோம். மிக வெப்பமானவாயுவில் நீராவிஅதிகமாயிருக்கும். வாயுவிற்குவெப்பம் குறையக்குறைய நீராவியும் குறைந்திருக்கும். குளிர்ந்தவாயுவைவிட சூடானவாயு அதிக நீராவியைக்கொள்ளும். இதை எளிதிலுணருதல்கூடும். நாம் சுவாசம் வெளியேவிடுந்தோறும் சற்றுநீராவி வெளிவருதல் இயல்பு. நம்மைச்சூழ்ந்துள்ள வெளிவாயுவில் காங்கையதிகமாயிருக்கின் நாம்விடும் சுவாசத்திலுள்ள நீராவி கண்ணுக்குப்புலப்படாது. ஆனால் நம்மைச்சூழ்ந்துள்ளவாயு அதிக குளிர்ச்சியாயிருக்கின் வெளியேவரும் நமது சுவாசத்திலுள்ள நீராவி புகையைப்போல் காணும். இதை கவனித்துப்பார்த்தால் நன்குவிளங்கும். இங்ஙனம் புகையாய்க்காணுதற்குக் காரணம்யாதெனின் விளம்புவாம். காற்றுகுளிர்ந்திருக்குங்காலங்களில் நீராவியைக் கொள்ளக்கூடவில்லையாதலால் அது புகையைப்போல் காணப்படுகின்றது. மேலும் எந்தகாலத்திலாவது கண்ணாடிமுதலிய குளிர்ந்த வஸ்துக்களின்மேல் மூச்சைவிட்டுப்பார்த்தால், உடனே அதில் நீராவிதங்கும், மற்றகாற்று காற்றுடன்கலக்கும். உடனே அது நீராய் விடும்.

குளிர்ந்தவாயுவிற்கு நீராவியையடக்கும் வலிமைகுறையும். இனி நீராவி வாயுவிற் கலந்திருப்பதெப்படியென்றும் பிரிவதெப்படியென்றும் விசாரிப்போம். ஒரு மட்பாண்டத்திலேனும் ஒருதாம்பாளத்திலேனுங் கொஞ்சம்ஜலம்விட்டுப்பாருங்கள்; அதைக்காற்று ஆறும்படிவைத்தால், மேற்படி பாத்திரத் [illegible]
ஜலம் இரண்டொருநாளில் சுண்டிப்போம். அந்த நீ [illegible]
கிரகிக்கப்படுகின்றது. இப்படி யிந்தகொஞ்சம்ஜ [illegible]
ரிட்டதுதான் இவ்வகண்டபூமியிலுள்ள எல்லா [illegible]

ரிக்ம். குளம், குட்டை, கடல்முதலிய விடங்களிலுள்ள ஜலமும் நீராவியாக காற்றில்தங்கும். குளிர்காற்றைவிட உஷ்ணமானகாற்றில் நீராவி அதிகமடங்கு மாதலால், இராக்காலங்களைவிட பகற்காலங்களிலும், குளிர்காலத்தைவிட கோடைகாலத்திலும், நீரதிகமாக ஆவியாகும். இதற்கு உதாரணம். ஈரமானவழிகளில் வெயில்காயும்போது அங்குள்ள ஜலம் ஆவியாகமாறுவதால் அவ்வீரம் உலர்ந்துபோகின்றது. அவ்வாறு சூரியன்பிரகாசிக்காவிட்டால் அவ்வீரம் சீக்கிரத்திலுலருதலில்லை

பூமியிலுள்ள ஜலமானது உஷ்ணத்தால் நீராவியாகக் காற்றில்சேரும். வாயுவிலுள்ள நீராவியானது குளிர்ச்சியால் ஜலமாகும். ஜலம்நீராவியாவதும் நீராவிஜலமாவதும் முறையே உஷ்ணத்தாலும் குளிர்ச்சியாலுமென உணர்க. இ. மு.

இந்துதத்துவபிரபாவம்

(7-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விந்து தத்துவப்பிரபாவத்தில், இனி நாம் நிறுத்தமுறையானே கூறும்பான்மையதான விஷயம் யோகம். இஃது பதஞ்சலியாலருளப்பட்டது. யோகமெனப்படுவது பேர்க்கால் பெரும்பான்மையும் சாங்கியத்தை அநுட்டித்ததேனும் சித்தாந்தத்தில் கடவுளொருவர் உண்டென்பதே அதன்கொள்கை. இஃது பிரபலமாய் * வாசியோகமென்றும், சித்தயோகமென்றும் இராஜயோகமென்றும் மூன்றுகாமிகத்தியினை யுடையது. நெடுநாள் வாழவேண்டுமென்னும் பேரவாதகொண்ட சிலர்காயகற்பங்கள்தேடியுண்டு, தேகம் வலிவடைந்ததாய்க்கருதி, உசுவாச நிசுவாசாதிகளை விளைவிக்கும் இடைகலை பிங்கலைகளை சுழிமுனைநாடியிலொடுக்கிச் சபம்போல சிறிதுநேரம் சலனமற்றிருக்கின்றனர். இதனால் தேகநாடிகடோறும் தந்தக்கடோறுஞ் சென்றிழியுங் குருதி மூளைக்கேறிச் சித்தப்பிரமையாகி ஓர் ஜோதிபோல் தோன்றும். இந்த ஜோதியைத்தான் வாசியோகிகள் பற்பலவாறு கூறுகின்றனர். இன்னிலையிலுள்ளவர்கள் ஓர்வித ஓங்காரசப்தம் தமக்குக்கேட்பதாய்ச் சொல்கின்றார்கள். நாம் இருசெவியும் பொற்றிச் சிறிதுநேரம் உற்றுக்கேட்டால் ஓர்வித சப்தங்கேட்பதுபோல் தோன்றும். இதன் காரணம் யாதெனின் நமது செவித்துளையிலுள்ளவாயு போகவிடமில்லாது செவிநாடியில் இடைவிடாது தாக்குகின்றது; அஃது அவ்வாறு தாக்குந்தோறும் நமக்கு சப்தங் கேட்பதுபோலிருக்கின்றது. யோகிகள் வாயுவை அடக்குவதனாலுண்டாகும் இத்தொனியையே ஓங்காரசப்தமென்கின்றார்கள். சித்தயோகமாவது அணிமா லகிமாமுதலிய அஷ்டமா சித்திகளையும் பெறும்படி தாமுற்று மேற்கூறியவாறுசெய்தல். இராஜயோகிகள், மனிதன் இறக்கும்போது எதை இச்சிக்கின்றானோ அவ்விச்சையைப் பூர்த்திசெய்யும்படி மறுபடி பிறப்பானென்னும் நம்பிக்கையுடையவர்களாதலான், அறிவானது யாதொன்றையும் இச்சியாது நித்திரையில் லயப்பட்டிருப்பதுபோல், நாட்டசூன்னியமாகும்படி மேற்சொன்னவாறு யோகம் புரிகின்றார்கள். இவையனைத்தும் பாதஞ்சல ரகசியத்திற்பகர்ந்திருக்கின்றது. இவற்றின் காரியங்கள் (தாதுத்வ ஆகருஷணத்தில்) [Mesmerism] நன்குவிளக்கியிருக்கின்றது.

உபாங்கங்களிற் பிரதமமாகிய மீமாம்சமானது பூர்வமீமாம்ஸமென்றும் உத்ரமீமாம்ஸமென்றும் இருபகுதியினையுடையதாக விருக்கின்றது. பூர்வமீமாம்சமானது பத்திமார்க்கத்திற்குரிய கிரியாகாண்டங்களைப்பகர்கின்றது. வியாசப்புரோசதமாகிய உத்ரமீமாம்சமோ ஞானமார்க்கத்தை நவிலும். இஃது நானென்பதெதுவோ அதுவே சகலமுமென்றும், அதற்குப்புறம்பாய்க் காணப்பட்டதெல்லாம் மனோபிராந்தத்தால் விளங்கிநிற்பதாதலால் மித்தையென்றும், மனோபிராந்தமெனப்படுவதே மாயையென்றும் (Delusion) காணப்பட்ட திரிஸ்லிய பதார்த்தமெல்லாம் மாயாவசப்பட்டு பொய்ப்பொருளாய் மரித்தலால் நாமரூபக்கிரியாவசத்ததெல்லாம் நானென்பதல்லவென்றும் அன்மைச்சொல்லினாலறையும். உலகாத்மகமாயுள்ள பிரம்மமே அதுவென்றும் அதுவே பிரபஞ்சமாய்ப் பரிணமித்ததென்றும், அதையதுவாய்க்காணுதலே ஞானமென்றும் அதைவிகற்பித்துககாணுதலே மாயையென்றும் வேதாந்திகள் சொல்வர். இதுவே (Pantheism) எனப்படுவது. இஃது உபநிஷத்துக்களில் நன்குவிளங்கும்.

* இஃது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, என்னும் எட்டுவிதப்படும்.

—0—

சாதி.

[illegible]கமனுகுலத்தாரால் தருமசாத்திரமென்று அ[illegible]பட்டதெதுவோ அதுவே நீதி நூல்.

[illegible]சேடமின்றி எதார்த்த உபதேசமுள்ளதா[illegible]வண்டும்.

பாரிசேடமின்றி எதார்த்த உபதேசமுள்ள சாஸ்திரமெதுவோ அதுவே மெய்நூல்.

மனுநீதி நூலோ அத்தன்மை யுடைத்தல்ல, ஆதலால் அது மெய்நூல் அலல.

மனு நூலில் வருண பேதத்தைப்பற்றிய அரோசியமான கட்டுக்கதைகள் விஸ்தாரமாக நிறைந்திருக்கின்றன.

மனு மனிதர்களுக்கு நற்போதனை யூட்டி அவர்கள் நன்மார்க்க ஞானம் பெற்று ஈடேற்றமடையும்படி தூண்டுதற்கேற்ற யதார்த்தத்தை எழுதிவைத்ததாகக் காணவில்லை. ஆதலால, அதனை சத்திய நூலென்று ஒப்புக்கொள்ளக்கூடாது.

ஆகவே, மனு நூலில் சொல்லியிருக்கிற வருணபேதத்தை மெய்யென்று அங்கீகரிப்பதெப்படி ?

இப்பரியாய தீபத்தின் இலௌகிகவைதிக நூல்களில் அனந்தம் பேதமையினால உண்டானவையாய்த் தெரிய வருகிறது. ஆனால், ஜாதிபேதமோவெனில், கர்வத்தினாலும், இறுமாப்பினாலும், பொறாமையினாலும், சோம்பலினாலும், பகுத்தறிவில்லா மாந்தர்க்கு துர்ப்போதனையூட்டி ஆசைகொளுத்தி நாசம் வருவித்து அவர்கள் தங்களுக்குக் கீழமைந்து ஒழுகவேணுமென்று ஆணவசிந்தையினால், ஏற்படுத்தப்பட்டதென பூரணமாய்த் தெளிவாகிறது.

ஜாதி பேதத்தைப்பற்றி இருவித அபிப்பிராய முண்டாகிறது. அவை:—1 ஜன்மத்தினாலோ அல்லது, 2 தொழிலினாலோ வென்பதே.

1. ஜன்மத்தினால் ஜாதி பேதம் ஏற்பட்டதெனில், பூலோகத்து மனிதர் அனைவருக்கும் காமக்குரோத முதலியவைகளும் மெய் வாய் முதலியவைகளும், சுவை யொளியோசை முதலியவைகளும், மனம புத்தி முதலியவைகளும், விருப்பு வெறுப்புகளும் சரியாய்ச் சமைந்திருப்பதினால், இவன் பிராமணன் இவன் க்ஷத்திரியன் இவன் சூத்திரன் என்னும் பேதம் எப்படி வெளிப்பட்டது? வருணபேதம் வழங்கவேண்டுமென்பது பிறவிக்குணமானால் தேகத்தில வருணபேதத்தைக் குறித்தும் யாதொரு அறிகுறியும் வெளிப்படாதிருப்பதுமன்றி, நம்பத்தகுந்த சாதாரண கலைகளில் ஒரு அத்தாட்சியேனுங் கண்டதுமில்லை. ஆயிரங்கோடி ஜனத்திற்கு மேற்பட்ட பூலோகத்தாருக்குள் நூறுகோடிக்கு உட்பட்ட இத்தேசத்தார்மாத்திரமே வருணபேதத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள். இத்தேசத்தாருக்கு மாத்திரம் வருணபேதத்தைக்குறிககும் ஏற்பாடு விதிக்கப்பட்டதா ? விதிக்கப்பட்டதெனில், அதற்குசாட்சியென்ன ? யாதொருசாட்சியுமில்லையே. ஆதலால், உற்றுநோக்குமிடத்து தங்களை மேற்குலத்தோரென்று விகற்ப உபதேசங்கொளுத்தும் பிராமணர் தங்களுக்கு செல்வத்தையும், புகழ்ச்சியையும் விருத்தியாக்குதற்கு ஏற்படுத்திக்கொண்ட யேற்பாடென்று பல நியாயங்களால் தெளிவாகிறது.

கிறிஸ்து சமயத்தை கைப்பற்றின ஓர் பிராமணனை பிராமணனென்று கூறுமல் கிறிஸ்தவனென்றும், ஜாதிபிரஷ்டனென்றும், கீழ்ஜாதியானென்றும் சொல்லக்கூடாது. ஏனெனில், ஜன்மத்தினால் ஜாதி வகுப்பு பிரிந்திருக்கிற மாடப்புறு எவ்வாறு மணிப்புறுவாகும்? அதுபோல ஜன்மத்தினால் வருணபேதம் ஏற்பட்டதெனில், அது எவ்வாறுகெடும், கெடுமெனில், அது ஜன்மத்தினால் ஏற்பட்டதல்ல. ஆகையால் இவ்விதது ர்ப்போதனையினால் மனிதரை நாசப்படுத்தத்தக்க சாஸ்திரங்களை ஏற்றுக்கொள்ளவே கூடாது.

2. தொழிலினாலே வருணபேதம் ஏற்பட்டதெனில், இக்காலத்தில் உயர் குலத்தோர் இயற்றவேண்டியதொழிலை கீழ்குலத்தோரும், கீழ்குலத்தோர் பின்பற்ற வேண்டியதொழிலை மேற்குலத்தோரும் இயற்றிவருவதால் தொழிலினால் ஏற்பட்ட ஜாதிவேற்றுமை தன் நிலையினின்று தவறிப்போய்விட்டதல்லவா? அவரவர்தத்தமது செய்கடனைத்தாமே செய்துவருவார்களானல் நான்பெரியன், நீசிறியன், நான்மேலானசாதியான், நீ கீழானசா

தியான் என்னும் பேதம் இருப்பதில்லையே. வருணபேதத்தினால் இக்கீழ்கண்டத்தில் தலைப்பட்டிருக்கிற கேடுகளொன்றுந் தலைப்படுவதுமில்லை. ஆகையால், இக்கோட்பாடுதார்க்கிக மதத்திற்கு மாறுபட்டு ஜாதிபேதம் இல்லையென்பதாயிற்று.

25th, August 1879. Colligal. — M. Masilamoni Mudaliar.

இதற்குஎதிர்மொழி.

சத்தியஞானானந்த மயனாகியெம்மறைக்குஞ் சான்றாய்நின்ற, வித்தகன்றண்ணருள்கொண்டெவ் வுலகவிருளோட்டுமா விளங்கியாண்டும், சொற்றிடற்கிங்கரியபுகழெய்திய தத்துவவிசாரிணியே யிங்ஙன், ஒற்றையாழித்தேரோன் மதியுமுளதனையுநீ வாழிமாதோ.........*

"பஃறலைப்பாந்தட்பணாமுடிபொறுக்க சுஃறலைவேல்செல்ச்சுவறியகடல்சூழ் நானிலத்து" அஞ்ஞானப் படலத்தை யொல்லையோட்டுவான்வெளிவந்து மெய்ஞ்ஞானச்சுடர்தனைச் சமானாதிகமின்றிக் கொளுத்தாநிற்கும் தத்துவவிசாரிணிபத்திராதிபரே,

நிகழ்ந்த பானுவாரப்பத்திரிகையின்கண், எம் மாசிலாமணிமுதலியார் வரைந்த கோட்பாட்டினுக் கெளியேன் மலைவுற்றிருத்தலினிதனைக் கிருபாநோக்கம் பாலித்துத் தங்களது பத்திரிகையினோர்கோணத்திற் பிரசுரஞ்செயல் வேண்டுமென மன்றாடுகின்றனன்.

கற்பிதமாய்த்தோன்றி நின்றழியு மியல்பினை வாய்ந்த வேனைய சமயங்கட்கு மாறாகிய ஆன்மாக்கட்கோர் மைவைப்பெனத்திகழும் இந்துமதத்தின் திறத்தையெடுத்துப்புகல்வான் தொடங்கல்.

"குறைவிலாக்கதிரோன்சூழுங் குன்றினிற் பிரசந்தன்னை அறிவிலாப்பங்கனேறி யருந்துவே னென்பதொக்கும்."

ஆயினும், தமியேன் சிற்றறிவுக்கிணங்கச் செப்புமிவற்றிற்குச் செவிசாய்ப்பீராக.

"பெருகுதண்கடலூற்றும்பெருநசை, யொருகணங்கனை யொக்குந்தகைமையேன்" எனத்திரஸ்கரிக்காது,

திகைப்புற்றலக்கணுறு நம்போலியர்க் கோரரியபுணையாயுதித்த மனு, தன் நூலிற்செப்பியது சொப்பனப்பிதற்றன்று. அளவிறந்த நற்பயன்களையே நிலைநாட்டுவான் கருதினானென்பது திண்ணறிவாளரனைவர்க்குந் தெள்ளிதிற்பளிங்கற்று. சதுர் வருணபேதத்தை யாதியினிகழச்செய்தகாரணமு மவற்றின் காரியமாய் விளைந்த பயன்களையு முறையே பகர்வாம்.

இந்நாட்டார், இலக்கணவிலக்கியமான கணித தத்துவசாத்திராதியவற்றிற்றக்க நாட்டம்வையாமலும், பகைஞரைப் போர்முனையிற் பங்கப்படுத்த வீரசௌரியாதிகள் குன்றியும், நாட்டார் நாகரீகத்திற் கின்றியமையாக் கருவியதாயிலங்கும் வர்த்தகாதிகளைலமற்றும், மானிடசுகஜீவனத்திற்கு முயிர்வாழ்க்கைக்கு மாதாரபூதமாய்நிற்கும் பற்பலதொழில்களுந் தடுமாற்றமுற்றும், நாடு சீர்மையற்றொளிமழுங்கிக் கிடக்கு மோர் நிலைமையினைக் கெல்வியெறிவான் கருதி, மனு வருணபேதத்தை யாதினிகழச்செய்தருளினர் காண்க.

இச்சூட்சியாலுண்டாக்கப்பட்ட பாகுபாட்டின் பயனாக அவ்வவ்வருணத்தோர் தத்தந்தொழிலை யூக்கத்துடனழுக்காறெனு மொருபாவியாற் கவரப்படாமல், நடாத்தி வந்தனர்.

இங்ஙனநிகழுங்கால், அவ்வவ்வருணத்தோர் செய்தொழிற்கின்றியமையா மதினுட்பதிட்பங்கட்கொக்க மதிப்பையு மேன்மையோராற் பெற்றுவந்தனரோயன்றோ! இதுகாரணமாகத்தான், முதன் மரபினருஞ் சாத்திரசோதனையில் நாட்டம்வைத்திருந்தவருமாகிய வேதியர் தெய்வத்தன்மையை யடைந்தனாரோலும்.

"தெய்வாதீனம் ஜகத்ஸர்வம், மந்திராதீனந்து தெய்வத, தன்மந்திரம் பிராமணாதீனம், பிராமணாமமதேவதா" என்பதே யதற்குச்சானுங்கரி.

அந்தோ! ஈண்டெடுத்துரைத்த வொழுக்கமுதலியமுற்றுங் குன்றி, நிரட்சரகுட்சிகளாய் வயிறு வளர்த்தலையே பெரும்பயனாகவுன்னி, வாணாளை வீணாய்க்கழிக்கும் வேதியர்க்கு, மதப்பித்தேறிய வுன்மத்தரனேகர், மதியின்றி வரையாது தத்தமரும்பொருளை வழங்கிவராநிற்கின்றனரே! — அதுநிற்க.

இங்ஙன மொவ்வோர் வகுப்பினருந் தத்தங்கடமைகளை முறைபிறழாது, மனச்சான்றுக்கிணங்க, வியற்றுவராயின் தேசந்தேசுறுவதற்கையமோது?

"கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது முந்நீர்க்
கடற்கரையினுப்மணலையெண்ணியளவிடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் [றெண்ணிப்
பிரித்தெழுதிக்கடையிலக்கம்பிரித்துவிடலாகும்"

அதனாலுண்டாகும்பயனை யலகிடலெந்திறத்ததன்றென்க.

தற்காலத்தி லப்பாகுபாடுகள் பாடழிந்துவிட்டதால் விளைந்தபய னெம் பெருமக்களனைவரது, பேரறிவுக்கிலக்காகாததன்றே. அச்சோ! பலவருணத்தாருந், தத்தங்குடிக்தொழிலையுந் தேசோபகாரத்தையுநாடாது, தற்பிரயோசனத்தையே கடைப்பிடித்து, ஆங்கிலேயபாடையிற் கல்வி கசடறப்பயின்றும், கிரகாச்சிரம தருமத்துக் கின்றியமையாததாகிய வுத்தியோகங்கள் கிடைக்கப்பெறாது,

"ஆடெரிபடர்ந்தகோடியரடுப்பில், ஆம்பிபூம்பத்தேம்பசியுழல இல்லிர் தூர்ந்தன, பொல்லாவருமுலை, சுவைதொறுஞ்சுவைதொறும், பால்காணமற் குழவி தாய்முகநோக்க, மனைவியென்முகநோக்க, யானுநின்முகநோக்கிவந்தனன்குமணா" என்றனவிட்டமெழுதுபோ லுள்ளங்கரைந்திரந்த பண்டிதிலகர்போல், கடனடுவே கலங்கவிழ்ந்ததாற் கலக்கமுறுங்காக்கைபோற், கலங்காநிற்கின்றனரொன்பது, பள்ளியிற்பயிலுஞ் சிறுமகவுமுணர்ந்தவிடயமே. ஆதலின், நம்மனோர்புராணநிபந்தனைகளின் நற்பயன்கள், சிகரிற் றிகழுஞ் சுடரற்றேயென்பது திண்ணம்:

உமிக்குற்றிக் கைவருந்துஞ் சில பொய்ப்புலவர்போலழுக்காற்றான், மனச்சான்றுக்குநேர்மாறாகிக் குதர்க்கித்து நான்பற்றியநெடுஞ்செவியற்குமூன்றேகாலென வாதிப்பான் தமியேன் வெளிப்பட்டிலேன். காலபேதத்தாற் புராதனநிபந்தனைகள் பயன்படமாட்டாதென்பது திண்ணமாயினுமவைகளையாதியி னிகழச்செய்த சீமான் கனக்காலத்துக்கிணங்கவவற்றையேற்படுத்தினராதலின், அன்னோரை மூடாக்கிர சிரோன்மணிகளெனச் சின்னாட்பல்பிணிச்சிற்றறிவினராகிய நம்போலியரோசுதன் முறையன்று. நிகழ்காலத் தந்நிபந்தனைகண் முற்றும் பொருந்தாவிடின் திரஸ்கரிக்க. பரோபகாரம், சகோதரநேசம் சாலநிறையப்பெற்ற சன்மார்க்க சிகாமணிகளனைவரும்

"ஈயாடுவதோ கருடற்கெதிரோ, யிரவிக்கெதிர்மின் மினியாடுவதோ, நாயாடுவதோவுறுவெம்புலிமுன், னரியாடுவதோநரகேசரிமுன், பேயாடுவதோவழகூர்வசிமுன்"

எனமுகஞ்சுளிக்காது வல்லே யெம்போலியர்க்கு நல்லறிவூட்டிக் குளவியின்றன்மையராவாராக.

எனதபிப்பிராயத்தைப் "பன்னும்பனுவற்பயன்றேரறிவுளா" ர்க்கினிமேற்புலப்படுத்துவதற்கிதுவே யாதிவாரமாக நிற்றல்வேண்டும். இங்ஙனம்

11th Sept. 1879. Madras. — தங்கள் பத்திரிகையாறபண்புற்றுவரும் T. Balasundarum Mudalliar.

அதற்கு மறுமொழி.

சென்னை டி. பாலசுந்தரமுதலியார் [...] பற்றி எழுதியதின் நியாயத்தை கண்[...] ராக இருக்க, அதைவிட்டு வேறுவழி[...] என்ன நியாயம்? அவர்எழுதியதனைத்[...] ர் வா[...]க்கினின்று பிறக்கும் சத்தியத்[...]

வர் வாக்கியங்கள் அர்த்தசாரமில்லாத பல சொற்கள் தொடுத்த பாம்மாலை.

மனுநீதி நூல்கள் வாசிப்பவர்களை கன ஈன ராக்ஷவனாவேயன்றி அவர்களைச்சீர்ப்படுத்தி நல்லோராக ஆக்குகின்றன என்பதைக்காணேம். அவைகளினுட் சில சூத்தங்களை அடியிற்காண்க.

மனுநீதிநூல்.

பிராயச்சித்த நிருணயம்.

12-வது சூத்தம். பிராமணன் வேதம் ஓதிக்கொண்டிருப்பதை சூத்திரன் கேட்டுக்கொண்டிருப்பானுகில், அச்சூத்திரன் செவித்துவாரத்தில் ஈயத்தை நெருப்பில் காய்த்துவிடவேண்டும்.

13. பிராமணன் உட்காந்த இடத்தில் சூத்திரன் உட்காருவானுகில் அவன்புட்டத்தை அறுத்துவிடவேண்டும்.

18. பிராமண ஸ்திரீயுடன் சூத்திரன் சயனிப்பானுகில் அவன்வாயினுள் இரும்பைக்காய்த்துவிடவேண்டும்.

24. பிராமணன் உண்டபின்பு அவனுடைய கைகளையும் வாயையும் கழுவுதற்குமுன் அவனை சூத்திரன் தொடுவானுகில் சூத்திரன்கையை சேதித்துவிடவேண்டும்.

30. ஒரு பிராமணன் வெங்காயம் சாப்பிடுவானுகில் சாந்திராயண விரதம் செய்து மறுபடியும் பூணநூல் தரிக்கும் சடங்குகள் செய்யவேண்டும்

36. பிராமணன் சூத்திர ஸ்திரீயுடன் சயனிப்பானுகில், அப்பாவ நிவர்த்திக்கு அப்பிராமணன் 100 காயத்திரி சபிக்கவேண்டும்.

50. பசுவைக்கொன்றவனும் பிராமணனைக் கொன்றவனும் ஒரேவித குற்றவாளியாவான். அவன் தன் பாவநிவர்த்திக்கு தன் சொத்துமுழுவதையும் பிராமணருக்கு தானமசெய்து பின்பு அக்கினிபிரவேசமாக வேண்டும்.

54. ஒரு பிராமணன் ஆட்டுப்பாலையாவது எருமைப்பாலையாவது குடிப்பானுகில் ஒருராத்திரிக்கு உபவாசம் இருக்கவேண்டும். பசுவின்பாலை பிராமணனுக்குக் கொடாமல் சூத்திரன் குடிப்பானுகில் 30 நாளைக்கு இராத்திரியில் உபவாசம் இருக்கவேண்டும்.

89. பிராமணன் திருடுவானுனல் சருவாங்கக்ஷவுரம் செய்துகொண்டு புது பூணநூல் தரித்து பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியது. சூத்திரன் திருடுவானுகில பாவ நிவாத்திக்கு தன் ஆஸ்தி முழுவதையும் பிராமணருக்கு தானம்செய்யவேண்டும்.

90. க்ஷத்திரியன் பிராமண ஸ்திரீயை புணருவானுகில் அவன் தன்னுடைய ஒவ்வொரு அவயவங்களையும் புல்லினுல் சுற்றிக்கொண்டு அக்கினிப்பிரவேசமாகவேண்டும்.

மற்றவையும் இவ்வாறே எழுதியிருக்கின்றன. இது தான் மனுநூல்!

27th September 1879. Colligal. } M. Masilamoni Mudr.

பொங்கல்விருத்தாந்தம்.

முற்காலத்தில் ஜனக்குறைவினுல் காடுகள் அடர்ந்து, "ஆராச்சுவரின்மேல் விதைத்தவிதையும் விளைந்துவந்தது" என்கிற பழமொழிப்படி அதிகமழைபொழிந்ததினுல் உபாயமானவையாயிருந்த மண்சுவர் வீடுகளெல்லாம் இடிந்துவிழுந்து, ஜனங்கள் ஒதுங்குமிடந்தேடி வாசஞ்செய்ய; கொட்டாய்கள் தகர்ந்து விழுந்து, மாடுகள் தங்குவதற் கிடமில்லாமல் காடுகளில் போய் ஒதுங்கிநிற்க; மழைவிட்ட மார்கழிமாதத்தில் ஜனங்களைக் கூட்டிக்கொண்டுபோய்த் தன்னைநோக்கிப் பொங்கலிடச்செய்தான். ஆகவே, தேவேந்திரனுக்குக் கோபம்பிறந்து அவன்செய்த கட்டளையின்படி அதை யழிக்கச் சப்தமேகங்களும் ஒருமிக்கவருஷிக்கவே, கிருஷ்ணன் கோவர்த்தனகிரியைச் சுண்டுவிரலால் குடையாகத்தாங்கிக் காத்துக்கொண்டான்.

இவ்வாருனல், என்கெதி என்னமாகிறதென்று தேவேந்திரன்முறையிட, கிருஷ்ணன் முன்பூசை உனக்கேயாகுமென்று அருளிச்செய்தனன். அதுதான் பெரும்பொங்கலுக்கு முன்னுள் நடக்கும் போகிப்பண்டிகை. (போகிஎன்பது தேவேந்திரன்.) அப்படி அவனவனும் பொங்கலிட்டுச் சந்தோஷமடைந்தபின்பு, காட்டில் மறைந்திருக்கிற தங்கள் மாடுகளினிமித்தம் பெரும்பொங்கலுக்கு மறுநாள் கடவுளுக்குப் பொங்கலிட்டுப் பிரார்த்தித்து, கும்புகூடி தப்பட்டைகளுடனே சென்று காட்டைச்சுற்றிலும் ஆரவாரஞ்செய்ய, போனதுபோக மீதிநிற்கிற மாடுகள்மிரண்டு வெளிப்படும்போது கொம்புகளிலும் கழுத்துகளிலும் கால்களிலும் கொடி முதலிய தழைகள் மாட்டிக்கொண்டு புறப்பட்டன. அவனவன் தன்தன் மாடுகளை ஓட்டிக்கொண்டுபோய் வீடுசேர்ந்தான். இதற்குத்தான் மாட்டுப்பொங்கலென்றும் மாடுமிரட்டலென்றும் பெயர். ஜனங்கள் தங்கள் சுகத்தைத் தேடிக்கொண்டபின்பு, சுற்றுப்பக்கத்துக் கிராமங்களி லிருக்கிற தங்கள் சுற்றத்தாருடைய க்ஷேமம் சிலமாசமாய்த் தெரியாதிருந்தமையால், அவர்களைப்போய் பால்பொங்கிற்று என்று விசாரிக்கிற வழக்கமுண்டாயிருந்தது. பூர்வம் தற்செயலாயும் அவசியமாயுமுண்டான இக்காரியங்களை இப்போது பழயவழக்கம் போகக்கூடாதென்கிற எண்ணத்தினுல் வீணுக்கு வலியச்செய்து பட்டணத்திலும் மாடுகளை விட்டுத்துறத்தி அல்லகல்லோலஞ் செய்வதுமன்றி, இடையன் முதலிய ஏழையும வேடிக்கைகயில் விழுந்து வீம்புக்கு வீண்செலவு செய்கிருர்கள்.

வர்த்தமானம்.

ஹைதராபாதிலே சீவில் டிஸ்பென்சேரிக்கு இருபதுநாள் குழந்தையொன்று வைத்தியத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அது பிறக்கும்போதே நாவி னுனியில் புற்றுரோகத்துடன் பிறந்தது. அந்தப்புற்று சாதாரணமான ஒரு எலுமிச்சங்கா யளவுண்டு. எல்லாவியாதிகளிலும் புற்றுவியாதி டாக்டர்களுக்கு வெகு கஷ்டங் தருவதென்று சொல்லப்படுகிறது. அந்த வியாதி ஓரிடத்தில் சொஸ்தமானுலும் விட்டுவிட்டு தேசமுழுதும் பரவுமாம். அந்தக்குழந்தையின் தாய்தந்தையர்களுக்கு அது பிழைக்குமென்கிற எண்ணமிலலவேயில்லை. டாக்டர் பீவான் அவர்கள் அந்தப்புற்றைப் பரவவொட்டாதபடி பட்டு நூலால் இறுகக்கட்டிவிட்டார். சிலநாளுக்குள் அந்தப்புற்று ஒற்றையிழை நூல்மேல் தொங்குவதுபோலத் தொங்கிறறு. பின்பு டாக்டர் அதை அறுத்துவிட்டு வைத்தியஞ்செய்துவருகிருர். குழந்தையும் திருப்திகரமாகவே சுகமடைந்துவருகிறது.

பெங்களூர் கமிஸ்ஸேரியாட் இலாக்காவிலே அப்பர்பர்மாவுக்குப்போக சில ஆள்கள் அமர்த்தப்பட்டார்கள். அவர்களுகு முன்பணமும் கொடுக்கப்பட்டது. அந்த ஆள்களைப் பத்திரமாக வைத்திருந்து சரியாக எண்ணிக்கைபிடித்துத் தொடர்வண்டியில் ஏற்றினுர்கள். உடனே எண்ணிக்கைபிடிக்கையில் நான்குபேர் எப்படியோ தப்பித்துக்கொண்டுபோய்விட்டதனுல் எண்ணிக்கைகுறைந்தது. ஓடிப்போனவர்களில் ஒருவன் அகப்பட்டான். உடன்படிக்கைத் துரோகமென்னுங் குற்றத்திற்காக அவனைமாஜிஸ்திரேட்டு விசாரணைசெய்தத்தில், அவனைப்பார்த்து, பிரகானபிரிவின்படி உன்பேரில் பிராதுகொண்டுவரப்பட்டதனுல், உன்னுடைய அதிர்ஷ்டத்துக்காக உன்கிரகங்களுக்கு வந்தனஞ்செய்யென்றுசொல்லி அவனை அனுப்பிவிட்டு, அங்குவந்திருந்த கமிசேரியாட் குமாஸ்தாக்களைநோக்கி, இனி இப்படிப்பட்ட ஆள்களிடத்திலே எழுத்துமூலமாய் உடன்படிக்கை வாங்கினுலொழிய பிராதுசெல்லமாட்டாதென்று அவர்களுடைய துரைக்குச் சொல்லச்சொன்னுர்.

திருவான்கூர்திவான் ராமையங்காரவர்கள் தம்முடைய உத்தியோகத்தைவிட்டு நீங்கிப்போவதாகவும், தலைமை திவான் பேஷ்கார் ராமாராவு அவர்கள் திவான் அதிகாரத்துக்கு வரப் போகிறதாகவும் வதந்தி